# DEPOSTITION OF WITNESS

# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL

## O.S. No. 53 of 2021

**Deposition of the Witness : PW4**

Solemnly Affirmed by Thiru/Tmt. Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | வைகுண்ட ராஜன் |
| Father's Name / Husband's name | : | நாராயணன் |
| Village | : | ஈசாந்தி மங்கலம் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 17.03.2026 |

**முதல்விசாரணை.**

நான் இந்த வழக்கில் அழைப்பாணை வந்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நாங்கள் சர்வே மற்றும் எல்லைகள் சட்டப்படி தான் சொத்துக்களை அளவீடு

செய்து அதற்குரிய குறீயிடுகளை செய்து எல்கைகளை திட்டமிடுவோம். புல எண் 424 முழுவதும் முழுமையாக சர்வே செய்யப்பட்ட சொத்து. ஆவணத்தின் அடிப்படையில் புல எண் 424ன் முழுமையான விஸ்திரணம் 1ெ ஹக்டர் 57.50 ஏர் . புல எண் 424 எத்தனை உட்பிரிவுகளாக செய்யப்பட்டுள்ளது என்றால் 18. மேற்படி 18 உட்பிரிவு செய்யப்பட்ட சொத்துக்களை மொத்தமாக கூட்டினால் மொத்த விஸ்திரணம் வரவேண்டும் என்றால் சரிதான். அசையா சொத்து பரிமாற்றங்கள் ஆவணத்தின் அடிப்படையில் பதிவுத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் என்றால் சரிதான். மேற்படி பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் குறிப்பிட்ட அந்தந்த தாசில்தாருக்கு பட்டா வழங்க அனுப்பி வைக்கப்படும் என்றால் சரிதான்.

அவ்வாறு பரிமாற்றங்கள் செய்யப்பட்ட சொத்தின் விஸ்திரணங்கள் ஆவணத்தில் எல்கைகளுக்கு உட்பட்டு தெளிவாகவும் குறிப்பாகவும் குறிப்பிடப்பட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு பரிமாற்றங்கள் செய்யப்பட்ட சொத்தின் விஸ்திரணங்கள் ஆவணத்தில் குழப்பமாக குறிப்பிட்டிருந்தால் சம்மந்தப்பட்ட தாசில்தார் சர்வே மற்றும் செட்டில்மென்ட் அதிகாரிக்கு பரிந்துரை செய்து அதன் உண்மையான விஸ்திரணத்தை கல ஆய்வு செய்து சம்மந்தப்பட்ட சொத்தின் அருகே இருக்கும் உரிமையாளர்களுக்கு முறையான அறிவிப்பு அனுப்பி நாங்கள் அதனை திட்டப்படுத்த வேண்டும் என்றால் சரிதான்.

ஒரு சொத்தின் உரிமையாளர் கிரையம் செய்யும் போது 25 சென்ட் என்பது 27.17 சென்டாகும் என்று குறிப்பிட்டிருந்தால் அது குழப்பமான ஆவணம் என்று கருத வேண்டும் என்றால் சரிதான். அந்த நிலையில் சர்வே மற்றும் எல்கைகள் சட்டம் பிரிவு 5,6 மற்றும் 10 ன்

படி நடவடிக்கை மேற்கொண்டு முழுமையாக சர்வே செய்து வரைபடம் தயாரித்து சர்வே உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் படி தான் பட்டா வழங்கப்பட வேண்டும் என்றால் சரிதான்.

வாசாஆ 3 ல் 10 ம் பக்கத்தில் சர்வே எண் 424/2 வில் 25 சென்ட் என்பது கைவச அனுபவப்படியும் ரீ சர்வே படியும் 27.17 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2.17 சென்ட் கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது சர்வே எண் 424 வின் முழுமையான விஸ்திரணத்தை பாதிக்கும் என்றால் சரிதான். ஆகையால் உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண் 424/18 மற்றும் 424/2 சொத்துக்களின் விஸ்திரணத்தை பாதித்துள்ளதா என்ற விவரம் மேற்படி சர்வே எண்களை முழுமையாக மறு ஆய்வு செய்தால் தான் துலங்கும் என்றால் சரிதான்.

நான் கொண்டு வந்த ஆவணங்களை பிரிவு 5,6 மற்றும் 10 ன் படி நடவடிக்கை மேற்கொண்டதற்கான விவரங்கள் துலங்காது என்றால் சரிதான். சர்வே செய்த பின்பு அதன் வரைபடம் மற்றும் அறிக்கை மற்றும் உத்தரவுகள் பிரிவு 11 ன் கீழ் சர்வே எண் 424 ல் உள்ள அனைத்து பாதிக்கப்பட்ட நில உரிமைதாரர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி பிரிவு 11 ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதற்கான விவரங்கள் துலங்காது என்றால் சரிதான். மேற்படி உத்தரவு பிரிவு 13 ன் படி மாவட்ட அரசிதழில் வெளியிட பட வேண்டும் என்றால் சரிதான்.

அவ்வாறான பிரிவு 13 ன்கீழ் நடவடிக்கை மேற்கொண்டதற்கான விவரங்கள் துலங்காது என்றால் சரிதான். ஆகையால் சர்வே எண் 424 குறித்த சர்வே முறையாக சட்டப்படியாக செய்யப்படாததால் புல எண்கள் 424/18 மற்றும் 424/2 அவற்றின் எல்கைகள்

மற்றும் விஸ்திரணம் ஆவணங்கள் மற்றும் உரிமையின் அடிப்படையில் அளவீடுகள் கொடுக்கப்பட்டிருப்பது முற்றிலும் தவறு என்றால் சரிதான். அதன் அடிப்படையில் பட்டா வழங்கிய உத்தரவும் தவறானது என்றால் சரிதான். தவறான அளவுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றாலும் மற்றும் ரத்து செய்யப்பட வேண்டும் என்றாலும் அது குறித்து எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது,**